S. M. FERNANDO
Opticians
Sight Tested Prescriptions Accurately Dispensed
★ ★ ★
580, HOSPITAL ROAD,
Near Bank of Ceylon
JAFFNA.

நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2022 மார்கழி 04 வியாழக்கிழமை [19-12-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 23

★ ★ ★
எஸ். எம். பேர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
இலங்கை வங்கி அருகாமை
யாழ்ப்பாணம்.

# கிறிஸ்மஸ் வேளையில் யுத்த நிறுத்தம் வருமா?

## புலிகள் தாக்குதல் நடத்தாவிடில் படைகளும் தாக்குதலில் ஈடுபடாவாம்

கொழும்பு, டிசம்பர் 19

நத்தார் தினம், புது வருடப் பிறப்பு ஆகியவற்றை ஒட்டி வடக்கு - கிழக்கில் யுத்த நிறுத்தம் வருமா?

பண்டிகைக் காலங்களில் படையினர் மீது தாக்குதல் நடத்தப்படாவிடில், படையினர் இராணுவ நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடமாட்டார்கள் என்று அரச தரப்பில் அறிவிக்கப்பட்டிருப்பதை அடுத்தே இக்கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது.

அமைச்சரவை முடிவுகளை வெளியிடுவதற்காக நேற்றுக் கூட்டப்பட்ட வாராந்திர செய்தியாளர் மாநாட்டில் வைத்து அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இந்த அறிவிப்பை விடுத்தார்.

"நத்தார், புது வருடப் பிறப்பு ஆகியவற்றை ஒட்டி வடக்கு, கிழக்கு மாகாணத்தில் யுத்த நிறுத்தம் செய்யும் தீர்மானம் எதனையும் அரசாங்கம் இதுவரை எடுக்கவில்லை. பொதுவாக இக்காலத்தில் தம்மீது தாக்குதல் நடத்தப்படாவிட்டால் படையினர் தாமாக தாக்குதல் நடவடிக்கை எதிலும் ஈடுபடுவதில்லை.

"என்றாலும் இக்காலத்தில் விடுதலைப்புலிகள் முதலில் தாக்கினால் படையினர் பதில் நடவடிக்கைகளை எடுப்பர்" —என்று அவர் மேலும் [3 ஆம் பக்கம் பார்க்க]

## சுன்னாகம் பொலீஸ் நிலைய திறப்பு விழா

யாழ்ப்பாணம், டிச. 19

தமிழீழ காவல்துறையின் சுன்னாகம் காவல் பணிமனை இன்று காலை திறந்து வைக்கப்படவிருக்கிறது.

காவல் துறையின் யாழ் நகரப் பணிமனையும், போக்குவரத்துப் பிரிவின் பணிமனையும் திறந்து வைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

## நாகராஜனுக்கு பிணை மறுப்பு

சென்னை, டிச. 19

முன்னாள் கல்வித்துறை அமைச்சுச் செயலாளர் ஆர். நாகராஜனைப் பிணையில் விடுதலை செய்யும்படி கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசேட நீதிபதி எஸ். எம். சித்திக் நிராகரித்துவிட்டார்.

## கடலில் 9 பேர் கைதாம்

காங்கேசன்துறைக் கடலில் வைத்து கடற்படையினர் விடுதலைப் புலிகள் என்று சந்தேகிக்கப்படும் ஒன்பது பேரைக் கைது செய்தனர் என்று கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் தெரிவித்திருக்கிறது. (த-எ)

## ஏழு பேர் கைது!

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி கிராமத்தை நேற்று முன்தினம் சுற்றி வளைத்த படையினர் அங்கு ஏழு பேரை கைது செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## சார்க் மாநாடு நாளை மறுதினம்!

கடந்த மாதம் நடைபெற இருந்து ஒத்திவைக்கப்பட்ட ஆறாவது 'சார்க்' மாநாடு நாளை மறுதினம் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இந்த மாநாட்டில் ஸ்ரீலங்கா, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், மாலைதீவு ஆகிய ஏழு உறுப்பு நாடுகளினதும் அரசுத் தலைவர்கள் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மாநாட்டின் போது உறுப்பு நாடுகளில் நிலவும் பயங்கரவாதம் மற்றும் சூழல் அபிவிருத்தி, உல்லாசப் பயணத்துறை, வர்த்தகம் ஆகிய விடயங்கள் குறித்து ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

'சார்க்' நாடுகளின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவுவதற்காக 50 லட்சம் டாலர்களுடன் "சார்க் நிதியம்" ஒன்றை ஏற்படுத்துவது பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்படும். (உ-எ-த)

## வெளியுறவு அமைச்சர்கள் சந்திப்பு நாளை நடக்கும்

### செயலர்கள் இன்று கூடி ஆராய்வு

கொழும்பு, டிச. 19

சார்க் உச்சி மாநாட்டுக்கு முன்னோடியாக, சார்க் அமைப்பில் அங்கம் வகிக்கும் ஏழு நாடுகளின் வெளியுறவுச் செயலாளர்கள் இன்று (வியாழன்) கொழும்பில் கூடி பேச்சு நடத்துவார்கள்.

நாளை (வெள்ளி) வெளியுறவு அமைச்சர்களின் கூட்டம் நடைபெறும்.

இதற்காக இந்திய வெளியுறவுச் செயலாளர் ஜே. என். டிக்ஷித் இன்று கொழும்பு வந்து சேர்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை—

'சார்க்' தலைவர்களின் மாநாடு நாளை மறுதினம் முடிவடைந்த பின்னர் அடுத்தநாள், 'சார்க்' நாடுகளின் விளையாட்டு வீரர்கள் பங்குபற்றும் "சாவ்" (தெற்காசிய சம்மேளன) விளையாட்டுப் போட்டி கொழும்பில் நடைபெறும்.

## காலையில் வரும் ராவ் மாலையே திரும்புவார்

கொழும்பு, டிச. 19

நாளை மறுதினம் நடைபெறும் 'சார்க்' மாநாட்டுக்காக அன்று காலையில் கொழும்பு வந்து சேரும் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் மாநாடு முடிந்ததும் அன்று மாலையே புதுடில்லி திரும்பி விடுவார்.

புதுடில்லி புறப்படுவதற்கு முன்னர் இந்தியப் பிரதமர் ராவ், ஸ்ரீலங்கா ஜனாதிபதி பிரேமதாஸவுடன் இருதரப்பு உறவு குறித்து பேச்சு நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இரு தலைவர்களும் பேசிக் கொள்ளும் விடயங்கள் தொடர்பான நிகழ்ச்சிநிரல் தயாரிக்கப்பட்டு வருவதாக கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில்—

உச்சிமாநாட்டில் பங்குபற்றுவதற்காக நேபாளப் பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ராலா இன்று தலைநகர் காத்மண்டுவிலிருந்து கொழும்புக்குப் புறப்படுகின்றார் என்று அறிவிக்கப்பட்டது. (உ-எ)

### முச்சந்தி முரளி



தாக்குதல் நிறுத்தம் என்டு இனம்... தாக்குதல் முஸ்தீபு என்டுஇனம்... என்ன புருடா உது......?

## புதுவருடத்துக்கு முன் தாக்குதல் முஸ்தீபு?

கொழும்பு, டிச. 19

புதுவருடத்துக்கு (ஜனவரிக்கு) முன்னர் வடக்கில் ஸ்ரீலங்காப் படையினர் புதிய தாக்குதல்களை மேற்கொள்ளும் சாத்தியம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதற்கான சாத்திய கூறுகள் இல்லை என்று தாம் மறுக்க முடியாது என்றனர் ராணுவ இராணுவ அதிகாரிகள் அரச சார்பு கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளனர்.

இதேசமயம்—

வடக்கிலுள்ள விடுதலைப் புலிகளின் முகாம்கள் மற்றும் நிலைகளுக்கு அருகில் உள்ள குடிமக்களை வெளியேறுமாறு கோரி—

பல ஆயிரக்கணக்கான எச்சரிக்கைத் துண்டுப் பிரசுரங்களை தமிழிலும், ஆங்கிலத்திலும் பாதுகாப்புப் படையினர் விமானத்திலிருந்து போட்டுள்ளனர் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்ததாக கொழும்புப் பத்திரிகைச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படையினரால் அதிகரிக்கப்பட்டு வந்த ஆயுதம் இடங்கள், முகாம்கள் மற்றும் நிலைகள் மீது எந்த நேரத்திலும் கடும் [8 ஆம் பக்கம் பார்க்க]

## திருமலையில் 2 நாள் 'நிலாஒளி' நடவடிக்கை

திருகோணமலை மாவட்டத்தில் இரு நாட்கள் படையினர் மேற்கொண்ட "நிலா ஒளி" (Moon Light) இராணுவ நடவடிக்கை கடந்த செவ்வாய்க்கிழமையுடன் முடிவடைந்துவிட்டது.

இராணுவத் தலைமையகப் பேச்சாளர் கேணல் சரத் முனசிங்க நேற்று செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

பெரிய விளாங்குளம் பகுதியில் உள்ள விமானத் தளத்தின் மீது தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளின் முகாமை அழிக்கவே அந்த இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் கேணல் முனசிங்க கூறினார். (ஒ-எ)

## போலி பாஸ்போர்ட் தயாரிப்பு:

## 3 இலங்கைத் தமிழர் உட்பட எண்மர் புதுவையில் கைது

புதுவை, டிச. 19

போலி பிரெஞ்சு பாஸ்போர்ட்டுகளைத் தயாரித்ததாக பாண்டிச்சேரியில் மூன்று இலங்கைத் தமிழர்கள் உட்பட எண்மரை பொலீஸார் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்தனர்.

கடந்த மாதம் பாரிஸ் நகர் போய்ச் சேர்ந்த ஜோசன் உத்தமன் என்பவரின் பாஸ்போர்ட் போலியானது என கண்டுபிடித்த பிரெஞ்சு அதிகாரிகள் அவரை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பி வைத்தனர் என்று கூறப்படுகிறது.

சென்னை வந்தடைந்த உத்தமனைப் பொலீஸார் கைது செய்து விசாரித்தனர். அப்போது அவர் அளித்த தகவல்களின் பேரிலேயே பிரஸ்தாப எட்டுப்பேரும் கைது செய்யப்பட்டனர். [ஒ-த-எ]

## பரீட்சை மண்டபம் மீது குண்டு வீச்சு:

## யாழ். பல்கலை மாணவர் நேற்று கண்டன பேரணி

யாழ்ப்பாணம், டிச. 19

கன்னாதிட்டி பண்டிவிரிச்சான் பகுதியில் கடந்த 9ஆம் திகதி ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை பாடசாலையின் மீது நடத்தப்பட்ட விமானக்குண்டு வீச்சுச் சம்பவத்தைக் கண்டித்து, யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று நகரில் கண்டனப் பேரணி ஒன்றை நடத்தினர்.

பல்கலைக்கழக மாணவரவை ஏற்பாடு செய்திருந்த இந்தப் பேரணி நேற்றுக் காலை பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்ற கண்டனக் கூட்டம் ஒன்றை அடுத்து ஆரம்பமானது.

அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் சுலோக அட்டைகள் சகிதம் பேரணியில் கலந்து கொண்டனர்.

பலாலி வீதியூடாக யாழ். நகரை வந்தடைந்த பேரணி அங்கிருந்து ஆஸ்பத்திரி வீதி, கண்டி வீதி வழியாக யாழ். [3 ஆம் பக்கம் பார்க்க]

## பலாலி படையினர் நால்வர் சினைப்பர் தாக்குதலில் பலி

### ஒரு வாரத்தில் 19 பேர் மரணம்

பலாலி முகாமைச் சேர்ந்த இடைக்காடுப் பகுதியில் விடுதலைப் புலிகள் இரு நாட்கள் நடத்திய தாக்குதல்களில் நான்கு படையினர் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஞாயிறன்று இடைக்காடு காவலரண் பகுதியில் கடமையில் நின்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் சினைப்பர் தாக்குதல் நடத்தியதில் மூவர் கொல்லப்பட்டனர் என்றும்—

அதே பகுதியில் நேற்று முன்தினம் நடத்திய சினைப்பர் தாக்குதலில் மற்றொரு இப்பாய் பலியானார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம், வளலாய், இடைக்காட்டுப் பகுதிகளில் கடந்த ஒரு வார காலத்தினுள் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களில் 19 படையினர் உயிரிழந்துள்ளனர் என்றும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-த)

## மனித உரிமைகளைப் படையினர் மீறியதாக அரசு ஒப்புக்கொள்கிறது

### எனினும் அறிக்கைவிட மறுப்பு

கொழும்பு, டிச. 19

கடந்த ஏழு ஆண்டுகளில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களில் பெருமளவில் பாதுகாப்புப் படையினரும் ஈடுபட்டிருக்கலாம் என்று அரசாங்கத் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று நடந்த வாராந்தச் செய்தியாளர் மாநாட்டில் வைத்து ஜனாதிபதியின் ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் படையினர் மனித உரிமை மீறலில் ஈடுபட்டதை பகிரங்கமாக ஒப்புக்கொண்டார்.

எனினும் நாட்டில் மனித உரிமை மீறல் நடந்ததாக பகிரங்க அறிக்கை விட வேண்டும் என்ற கோரிக்கையை அரசாங்கம் ஏற்கவில்லை என்று அவர் தெரிவித்தார்.

"இலங்கை - வடக்கு கிழக்கு மனித உரிமை மீறல்" என்ற தனது அறிக்கையில் சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசு ... அவற்றில் முப்பத்திரண்டை அரசாங்கம் ஏற்று நடைமுறைப்படுத்த உள்ளதாக திரு. பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

#### படையினரும் மீறினர்

★ கடந்த ஏழு ஆண்டுகளில் நாட்டில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் பரவலாக இடம்பெற்றுள்ளன என்பதை ஏற்றுக்கொண்டு இலங்கை அரசாங்கம் பகிரங்க அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும் என்பது மன்னிப்புச் சபையின் முதலாவது சிபார்சாகும்.

இந்த மனித உரிமை மீறல் சம்பவங்களில் குறிப்பாக ஆட்கள் காணாமற்போனமை, சட்டவிரோதமான கொலைகள் ஆகிய குற்றச் செயல்கள் இடம்பெறுவதற்கு பாதுகாப்புப் படையே பொறுப்பாக இருந்தது என்பதையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அதே சிபார்சில் வலியுறுத்தப்பட்டிருந்தது.

[8 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

பெண்களுக்குரியதும், ஆண்களுக்குரியதுமான 26 x 1 3/8 அல்லது 26 x 1½ ரயர் அளவு களையுடைய உபயோகித்த சைக்கிள்கள் தேவை. விற்பனைக்கு வைத்திருப்பவர்கள் கபமரன மோட்டோர்ஸ், 79, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் முகவரியில் தொடர்பு கொள்ளவும். (4443)

### தவறிவிட்டது

கைதடி வடக்கு ஆச்சிரமத்திலிருந்து 13-12-1991 அன்று சாவகச்சேரிக்கு செல்லும் போது விசாரசாரம், ஒலி லொடுக்கம், திருக்குறள் ஆகிய புத்தகங்களும் மற்றும் கொப்பிகளும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து டாக்டர் வ. சின்னப்பு, ஆனந்தஜோதி வைத்தியசாலை, ஹென்ஸ்மன்லேன், சாவகச்சேரி என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (19070)

### புத்தகம்

1989 ஆம் ஆண்டுக்கான சாகித்திய மண்டலப் பரிசைப் பெறும் நாடக நூல், அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதிய முதலாம்பிள்ளை 30/-. 10 வானொலி நாடகங்கள், ஓரங்க நாடகம் பற்றிய ஒரு கட்டுரை. (18921)

### ஆய்வுக் கட்டுரை

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறை விதிகளுக்கு அமைய கட்டிக் கொடுக்கப்படும். இ. சங்கர், 455, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (இ-1095)

### வேப்பெண்ணெய்

பயிர்களைத் தாக்கும் நோய்கள் பூச்சிகளைக் கட்டுப்படுத்தவும், கிருமிநாசினியாகவும், மருத்துவ தேவைகளுக்கும் வேப்பெண்ணெய் உதவுகிறது. சுத்தமான வேப்பெண்ணெய்க்கு ''மிக்கைவத்'' லேபலைப் பார்த்து வாங்குங்கள். அனைத்து கோப்பி கடைகளிலும் கிடைக்கிறது. (இ-1124)

### துர்க்கா திருமண சேவை

சகல தொழில்களிலும், மணமகன்கள் உண்டு. எல்லா மதங்களிலும் திருமணத் தொடர்பு செய்து கொடுக்கப்படும். ஜாதகம், புகைப்படத்துடன் எல்லா நாட்களிலும் தொடர்பு கொள்ளலாம். அவுஸ்திரேலியாவில் வேலை செய்யும் செவ்வாய்க் குற்றம் அற்ற மணமகனுக்கு பெண் தேவை. துர்க்கா திருமண சேவை, வளர்மதி இல்லம், கே. கே. எஸ். வீதி, மல்லாகம். (4427)

---

## A/L 93
(விஞ்ஞான பாடங்கள்)

ஆரம்பம்:
21 - 12 - 1991
(சனிக்கிழமை)

**New Master Institute**
JAFFNA.
(இ/1096)

---

## நிருரியூசன் சென்ரர்
ஸ்ரேசன் றோட், சோண்டாவில்.

## A/L 93
தூய பிரயோக **கணிதம்**

திரு. கமலசிங்கம்

ஆரம்பம்:
21 - 12 - 91
[சனி 4 மணி]
(இ-1098)

---

திருச்சிற்றம்பலம்

## பகிரங்க வேண்டுகோள்

மெய்கண்டதேவர் ஆதீன முதல்வர் பொறுப்பினை ஏற்கும் எண்ணம் அடியேன் கேட்கப் பெற்றுள்ளமையால், சைவப் பெருமக்கள், நிறுவனங்கள் தாமதமின்றித் தமது கருத்தினைப் பதிவுத் தபாலில் தெரிவிப்பார்களாக.

சைவசித்தாந்த கலாநிதி-
க. கணபதிப்பிள்ளை,
55/44, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.
(19081)

---

# கம்பியூட்டர் கல்வி

★ *Basic, d Base III +*
*Lotus 1-2-3, Word Star 2000+*
ஆரம்பம்: சனி, ஞாயிறு வகுப்புக்கள்
28 - 12 - 1991 மாலை 1-30
திங்கள், புதன், வெள்ளி வகுப்புக்கள்
23 - 12 - 1991 மாலை 1-30

★ *Personal Computer*
*Operating System*
காலம்: 1 மாதம், கட்டணம் ரூபா 1,000 மட்டும்
ஆரம்பம்: 23 - 12 - 1991, 28 - 12 - 1991

பிரத்தியேக வகுப்புக்கள் எந்நாட்களிலும் ஆரம்பமாகும்.

வடமராட்சி மாணவர்களுக்கு!
எமது நிறுவனத்தின் வடமராட்சிக் கிளை வெகுவிரைவில் திறந்து வைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு:
யுனிக்கோ கம்பியூட்டர் நிலையம்,
37, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(இ-1078)

---

## C. C. A.
கலை, வர்த்தகக் கல்லூரி
வெலிங்டன் சந்திக்கருகாமை

### புதிய பிரிவு
## A/L - 93

பொருளியல் — உதயன்
கணக்கியல் — ஸ்ரீ
வர்த்தகம் — ரட்ணம்
அளவையியல் — சயந்தன்
தமிழ் — குழந்தை
இந்து நாகரிகம் — பாலா
கிறிஸ்தவ நாகரிகம் — கொலின்ஸ்

மு. குறிப்பு:
ஏற்கனவே பிரிவு 1, இல் பதிவு செய்தவர்கள் பழைய நேர அட்டவணைப்படி வரவும்.

ஆரம்பம்:
2. - 12 - 1.91
7-00 மணி
(இ-1075)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 13 — 6 — 1959
மறைவு: 19 — 12 — 1990

## திருமதி தமயந்தி சிறீரவீந்திரா

இத்தரையில் உனை பிரிந்து வாழ்வதற்கு
இயலாத கண்ணே ''யாம்'' என்ன செய்வோமடி?
தாயவளும் தனியே விட்டு தேறுகிறாள்!
தந்தையுனை தம்பியுடன் தேடுகிறார்!!
பத்திரண்டு மாதங்கள் ஆயுமென்ன
பத்திரமாய் எம்மிடமே வந்து சேர்வாய்.

உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்;
— குடும்பத்தினர்

சி. குலசிங்கம்,
''சிவஸ்தன்'',
சொர்க்குளம் மேற்கு.
(19073)

---

# நன்றி நவிலல்

## அமரர் சு. அம்பலவாணர்

எங்கள் குடும்பத்தலைவர் அமரர் சு. அம்பலவாணரின் மரணத்தினையொட்டிய எங்கள் துயரத்தில் பங்கு கொண்ட யாவர்க்கும், மேலும் அன்னார் நோயுற்றிருந்த வேளையில் — அன்புடன் பராமரித்த — யாழ். அரசினர் மருத்துவமனை சார்ந்த அனைவருக்கும், ''பசுமை'' பொதுப்பணி மன்றத்தினருக்கும் எங்கள் மனமுவந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்,

திருமதி பார்வதித்தாய் அம்பலவாணர்,
அம்பலவாணர் உமாசங்கர்,
திருமதி பத்மரஞ்சினி உமாசங்கர்,
அப்புத்துரை பூரணச்சந்திரன்.

ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.
(19078)

---

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பு:
01 - 08 - 1970

அன்னியர் அழிப்பு:
19 - 12 - 1987



## செல்வன் தங்கராஜா யசோதரன்
[யாழ். மத்திய கல்லூரி மாணவன்]

யசோ நீ மறைந்தாலும் உன்
நினைவுகள் எம்மை விட்டு அகலாது.

உன் பிரிவால் வாடும்:
அம்மா, சகோதரர்கள்,
உற்றார், உறவினர்கள்,

67, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(19079)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



## செல்வி பிலிப் றெக்சியா
(ஜெனோவா)

தாயின் மடியில்:
16-12-1974

ஆண்டவன் அடியில்:
19-12-1990

இறைவா உம் இரக்கத்திற்கேற்ப
என் மீது இரக்கம் வையும். சங். 50 - 1

அன்புள்ள ரெக்சி!

உமது மரணத்தினால் நீர் எமக்காக அடைந்து கொண்ட முடிவில்லாப் பேரின்பவாழ்வில், எம்மிடம் இருந்து அழைத்துக் கொண்ட றெக்சியாவையும் சேர்த்தருள வேண்டுமென்று உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம் ஆமென்.

— குடும்பத்தினர்.

191/3, கடற்கரை வீதி,
பாசையூர்.
(19067)

---

# பாரதி கல்வி நிலையம்
சித்தன்கேணி

**புதிய பிரிவு: ஆண்டு 11, 10, 9**

ஆரம்பம்: 21 - 12 - 91 சனி

விஞ்ஞானம் — J R குரி
கணிதம் — நவரெட்ணராசா
தமிழ் — குணபாலன்
சமூகக்கல்வி — ஜெயக்குமார்
ஆங்கிலம் — R. D பகீரதன்
வர்த்தகம் — சத்தியபாலன்

★ விரைவில் அனுமதிகள் மட்டுப்படுத்தப்படும்.
(4438)

---

# NEW SCIENCE HALL
கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம்

## 93 - A/L
## புதிய பிரிவு

சனி, ஞாயிறு வகுப்புக்கள்

| | |
|---|---|
| பௌதிகவியல் | திரு. சோதிலிங்கம்<br>திரு. கணேசன் |
| இரசாயனவியல் | திரு. சண்<br>திரு. மணியம் |
| தாவரவியல் | திரு. குணசீலன் |
| விலங்கியல் | திரு. தம்பிராஜா<br>திரு. ஈஸ்வரதாசன் |
| தூய/பிரயோக கணிதம் | திரு. வெக்டர்<br>திரு. சந்திரமோகன் |

ஆரம்பம்:- 21 - 12 - 1991

குறிப்பு:- இடைநிறுத்தி வைக்கப்பட்ட 93 A/L வகுப்புக்கள் மீண்டும் 21 - 12 - 1991 முதல் ஆரம்பமாகின்றன.
(இ-1202)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்: 20 — 5 — 1933
விண்ணில்: 19 — 11 — 1991

## அமரர் அ. ப. பாலசுப்பிரமணியம்
[டிராக்டர் பாலர்]

விவசாய விளைநிலத்தில் விரத்தின்
விளைவிடமாய் திகழ்ந்து எம்மை
பெற்று வளர்த்து பேணிக்காத்த பெரும் தெய்வமே!
வேரோடு வீழ்ந்திட்ட எங்கள் விருட்சமே!
எங்கு தேடினும் கிடைத்திடாப் பெரும் களஞ்சியமே!
எங்களுக்காய் வாழ்ந்தவரே எங்கள் ஐயாவே!

உங்கள் ஆத்மா சாந்தி பெற நுணுாவிலில் பிள்ளையார் ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி, பரணாவிடை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் பாதங்களை தொழுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்;
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்.

7 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.
(4445)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தொண்டாவின் யோசனை

இனப் பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு, அமைச்சர் திரு எஸ். தொண்டமான், நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்குச் சமர்ப்பித்துள்ள யோசனையின் விவரங்கள் இப்போது தெரியவந்துள்ளன.

அந்த யோசனை தீர்வுக்கான முழுமையான திட்டமல்ல. ஓர் அடிப்படை வரைவே ஆகும்.

அரசாங்கம் ஏற்றுக் கொண்டால் மட்டுமே அதனை விரிவாக்கி, விவரங்களைச் சேர்த்துப் பூரணமாகப் பார்க்க முடியும்.

ஆகையால் இப்போது வெளியிடப்பட்ட அடிப்படை வரைவைப் பார்த்து, அது இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு உதவுமா, இல்லையா என்பதை நிர்ணயிக்க முடியாது. தமிழர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதா, நிராகரிக்க வேண்டியதா என்றும் கருத்துக் கூற இயலாது.

மேலும் இது தமிழர் கட்சி ஒன்றினால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனை. இந்த யோசனையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் அம்சங்களை அரசாங்கம் கொள்கையளவிலாவது ஏற்றுக் கொள்கிறதா என்ற முடிவு இன்னும் தெரியாது.

மொத்தத்தில் தமிழர்களின் உரிமைகளை வழங்குவதற்கென வகுக்கப்பட்டுள்ள இந்த மேலெழுந்தவாரியான வரைவு, தமிழர்களுக்கு ஏற்புடையதா என்பதை விட சிங்கள அரசியல் வாதிகளும் தெற்கின் ஏனைய சக்திகளும் அங்கீகரிக்கக் கூடியதா என்பதே முக்கியம்.

எவ்வாறாயினும், திரு. தொண்டமானின் இந்த அடிப்படை வரைவை, தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளோடு ஒப்பிட்டு நோக்கும் போது அது கரைசில் சனமின்றி, பாரமின்றி மேலே தெரிகிறது!

தமிழர்களுக்கு சுயாட்சி வழங்குவதற்கான ஒரு யோசனை என்று கூறப்பட்டாலும், சுயாட்சி சார்ந்த பூரணத்துவம் அதில் தொனிக்கவில்லை. இப்போதுள்ள மாகாண சபையை விட சற்றுக் கூடுதல் வலுவுள்ளதாக மட்டுமே தெரிகிறது. ஆனால் தமிழர்களுக்கான அதிகாரப் பகிர்வு ஸ்ரீலங்காவின் ஒற்றையாட்சிக்கு உட்பட்டே செய்யப்படுமா அல்லது சமஷ்டி அரசமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டுமா என்பதை திரு. தொண்டமான் தெளிவுபடக் கூறவில்லை; மயக்க நிலையில் விட்டிருக்கிறார்.

காணி, காவல்துறை, பொருளாதாரத் திட்டமிடல், நிதி, நீர்ப்பாசனம், கல்வி, விவசாயம், தொழிலாளர் நலம், பொதுசனத் தொடர்பு போன்ற துறைகளில் சுயாட்சி அமைப்புக்கு கணிசமான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

வடக்கு - கிழக்கில் அரச காணிகள் இலங்கை சுதந்திரமடைந்தபோது இருந்த இனவிகிதாசாரப்படியே பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டாலும், அண்மைக் காலங்களில் நடந்த சிங்களக் குடியேற்றங்களை எவ்வாறு கையாளுவது என்பது குறித்துத் திட்டவட்டமாக எதுவும் சொல்லப்படவில்லை.

மொத்தத்தில், மாகாண சபைத் திட்டம் சிறிய அளவில் விருத்தி செய்யப்பட்டதன் வடிவமாகவே திரு. தொண்டமானின் அடிப்படை வரைவு (யோசனை) தெரிகிறது. தமிழர்களின் தன்னாட்சி அபிலாசையை பூர்த்தி செய்வதற்கு முற்றாக உதவும் என்றும் கூறமுடியாது!

# சோவியத் யூனியன் 12 நாட்களில் மறையும்!

மாஸ்கோ, டிச. 19

இந்த வருட இறுதிக்குள் —இன்னும் பன்னிரண்டு நாட்களில்— 'சோவியத் யூனியன்' என்ற பெயர் முற்றாக மறைந்துவிடும் இது தொடர்பான இணக்கத்திற்கு சோவியத் ஜனாதிபதி கோர்பசேவும் ரஷ்ய ஜனாதிபதி யெல்ட்சினும் வந்திருக்கிறார்கள்.

இதற்குப் பின்னர் திரு. கோர்ப்சேவின் நிலை என்ன என்பது பற்றி எதுவும் தெரிவிக்கவில்லை.

புது வருடத்திற்கு முந்திய தினம் சோவியத் யூனியனின் கொடி இறக்கப்படும்.

கிரெம்ளின் முதலிய அரச கட்டடங்கள் ரஷ்ய அரசுக்கு கைமாறுவதையும் இது குறிக்கும்.

இதேவேளை—

ஏனைய குடியரசுகளும் ஒரு பொதுநல அமைப்பின் கீழான தனிநாடுகளாக தங்களை பிரகடனம் செய்து கொள்ளும் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

# குடியரசுகளுக்கிடையே அணு ஆயுதப் போட்டி!

சோவியத் யூனியனில் இருந்து சிதறுண்டு தனிநாடுகளாக மாறும் குடியரசுகளிடையே அணு ஆயுதங்களை யார் வைத்துக்கொள்வது என்பதில் தகராறு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

ஒன்றுபட்ட சோவியத் யூனியனில் ரஷ்யா, உக்ரேன், கஸகிஸ்தான் ஆகிய மாநிலங்களில் பெருமளவு அணு ஆயுதங்கள் வைக்கப்பட்டிருந்தன. இப்போது மூன்று குடியரசுகளும் தனிநாடுகளாக மாறிய பின்னர், அந்தந்த குடியரசுகளில் இருந்த அணு ஆயுதங்கள் அவற்றுக்கே சொந்தமாகின.

ஆனால் மிகப் பெரிய குடியரசான ரஷ்யா, மற்ற இரண்டு மாநிலங்களிலும் உள்ள அணு ஆயுதங்களை தனது மாநிலத்திற்கு அனுப்பி விடும்படி ஏனைய இரண்டு குடியரசுகளையும் கேட்டுக் கொண்டது. அதற்கு கஸகிஸ்தான் குடியரசு மறுப்புத் தெரிவித்துள்ளது.

ரஷ்ய அரசு அணு ஆயுதங்களை வைத்திருக்கும் வரை கஸகிஸ்தானும் அவற்றை வைத்திருக்கும் என்று கஸகிஸ்தான் அரசப் பேச்சாளர் ஒருவர் சொன்னார். (உ-எ)

## யாழ். பல்கலை.,

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

செயலகத்தை அடைந்தது.

அங்கு வைத்து மாணவர் அவைப் பிரதிநிதி ஒருவர் யாழ். அரச அதிபரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தார்.

ஜனாதிபதிக்கென சமர்ப்பிக்கப்பட்டிருந்த அந்த மகஜரை தாம் கொழும்பில் ஜனாதிபதியிடம் கையளிப்பதாக அப்போது யாழ். அரச அதிபர் குறிப்பிட்டார்.

பின்னர் பேரணி நல்லூர் — கோவில் வீதிச் சந்தியில் அமைந்துள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் அலுவலகத்துக்குச் சென்றது. அங்கும் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. (ஓ-5-100)

## மனித உரிமை-,

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

முதலாவது சிபாரிசு குறித்து திரு. பிரட்மன் கூறியதாவது:-

இம் மனித உரிமை மீறல் சம்பவங்கள் பலவற்றிற்கு ஜே. வி. பி., விடுதலைப் புலிகள் மற்றும் விழிப்புக் குழுக்கள் போன்ற ஆயுதக் குழுக்களே காரணமாக இருந்தன.

வடக்கு - கிழக்குப் பகுதியில் இந்திய அமைதிப் படையினரா விடுதலைப் புலிகளுடன் மோதிக் கொண்டபோதும், அங்குள்ள போட்டிக் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதல்களின் போதும் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றிருக்கலாம்.

ஜனநாயகத்தையும் நாட்டின் ஒருமைப்பாடு மற்றும் ஒற்றுமையையும் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டிருந்த பாதுகாப்புப் படையினரில் ஒரு பிரிவினர் மனித உரிமை மீறல் சம்பவங்களுக்கு காரணமாக இருந்திருக்கலாம்.

மனித உரிமை மீறல் தொடர்பாக சுமார் 50 படையினர் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. மேலும் 50 படையினர் மீது ஒழுங்கீன ரீதியாக விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

ஸ்தாபன ரீதியாக அல்லது நீதிமன்றரீதியாக அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது — என்றார்.

★ சகல சந்தர்ப்பங்களிலும் சர்வதேச மனித உரிமைகள் சங்கத்தின் அடிப்படைக் கோட்பாடுகளைப் பின்பற்றும்படி அரசாங்கம் அதன் பாதுகாப்புப் படைகளுக்கு தெளிவான கடும் வார்த்தைகளிலான உத்தரவுகளை கிரமமாக வெளியிடவேண்டும் என்று இரண்டாவது சிபாரிசு கோரியுள்ளது.

— இந்தச் சிபாரிசையும் அரசு ஏற்றுள்ளதாக திரு. பிரட்மன் தெரிவித்தார்.

★ பதற்றமான பகுதிகளில் நிலைகொண்டுள்ள படையினரை கிரமமாக பாதுகாப்புப் படை அதிகாரிகள் சந்திக்க வேண்டுமென்பது மற்றொரு சிபாரிசாகும்:

— அதனையும் அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது.

### துரிதமாகும்

★ தற்போது நீதிமன்றத்தில் உள்ள பாதுகாப்புப் படையினர் சம்பந்தப்பட்ட குற்றவியல் வழக்குகளைத் துரிதமாக விசாரிப்பதற்கு அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும் என்பது இன்னுமொரு சிபாரிசு.

— அதனையும் அரசு ஏற்றுள்ளது.

★ குற்றச் செயல்களில் ஈடுபட்ட படையினரைப் பாதுகாப்பதற்காக கொண்டுவரப்பட்ட தண்டனை விலக்குச் சட்டத்தை ரத்துச் செய்ய வேண்டும் என்று மற்றொரு சிபாரிசு கூறுகிறது— இச் சட்டம் 1988 ஆம் ஆண்டுடன் காலாவதியாகிவிட்டது.

1-1-1991க்கு முன்னர் காணாமற் போனவர்கள் பற்றியும் விசாரிக்கக் கூடியதாக, ஆட்கடத்தல் பற்றிய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அதிகாரத்தை விஸ்தரிக்க வேண்டும் என்பது மன்னிப்புச் சபையின் மற்றுமொரு சிபாரிசு.

— அரசு அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

ஏற்கனவே நடத்தப்பட்ட விசாரணையின் முடிவுகள் வெளிவரத் தாமதமாகும் என்ற காரணத்தினாலும், காணாமற் போனவர்கள் பற்றி இலங்கைக்குள் கடந்த அக்டோபரில் வந்து விசாரணை நடத்திய ஐ. நா. செயற்குழு ஒன்றின் அறிக்கையை அரசு எதிர்பார்த்திருப்பதாலும், மன்னிப்புச் சபையின் இச்சிபாரிசை அரசினால் ஏற்றுக்கொள்ள முடியாதிருப்பதாக திரு. பிரட்மன் [illegible]

## சிறிமாவை அகற்ற முயற்சி

கொழும்பு, டிச. 19

சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து திருமதி சிறிமா பண்டாரநாயக்கா இம்மாத முடிவுக்குள் நீக்கி விடுவதில் அக் கட்சிக்குள் இருந்து கொண்டு செயற்படும் தீவிரப் போக்குள்ள இளைஞர் பிரிவு முனைப்புடன் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

கட்சிக்குள் சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா முட்டுக்கட்டையாக இருந்து வருகிறார் என்று அத் தீவிரப் போக்குக் குழு கருதுகிறதாம். (ஒ-த-எ)

## மத்தியஸ்தர்கள் பரீட்சை

யாழ்ப்பாணம், டிச. 19

யாழ். மாவட்ட உதைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் புதிய அங்கத்தவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை ஒன்றை நாளை காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடத்தவிருக்கிறது. (உ)

## 3 நாள் நடக்கும் பயிற்சி கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிச. 19

சவிஷ்— எழுதுவினைஞர் இணைந்த தர மேற்பார்வைத்தர உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு நாளை வெள்ளி முதல் ஞாயிறு வரை— மூன்று நாட்களுக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தினமும் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை கருத்தரங்கு இடம்பெறும். (ஓ-126)

## கிறிஸ்மஸ்.,

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சொன்னார்:

இதற்கிடையில்—

இந்தப் பண்டிகையோடு தொடர்ந்து போர் நிறுத்தத்தைக் கடைப் பிடிக்க விடுதலைப் புலிகள் முன்வருவார்கள் என்று சிங்களப் பத்திரிகைகள் செய்தி, வெளியிட்டிருக்கின்றன.

இராணுவம் நடந்து கொள்ளும் முறையைப் பொறுத்து விடுதலைப் புலிகள் தமது போர் நிறுத்தத்தை நீடிக்கக் கூடும் என்றும்—

அமைச்சர் தொண்டமான் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்தும் போது போர் நிறுத்தம் கடைப்பிடிக்க விடுதலைப் புலிகள் தயாராகி வருகின்றனர் என்றும் அந்தப் பத்திரிகைகள் தமது செய்தியில் மேலும் தெரிவித்தன.

ஆனால் அவ்வாறு விடுதலைப் புலிகளுடன் அரசு போர் நிறுத்தத்தைக் கடைப்பிடித்தால், அந்தக் காலத்தை விடுதலைப் புலிகள் நன்கு பயன்படுத்தி அடுத்த போருக்கு தம்மைத் தயார் செய்து கொண்டு விடுவர் என்றும்—

இதன்மூலம் தற்போது முன்னணி பெற்றுள்ள இராணுவம் பின்னடைந்துவிடக்கூடும் என்றும் இராணுவத்தின் மூத்த அதிகாரி ஒருவர் கூறினார். (உ-எ)

## புதுவருட--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல் நடத்தப்படலாம் என்ற எச்சரிக்கை குண்டுப் பிரசுரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அந்தச் செய்தி மேலும் தெரிவிக்கிறது. (ஓ-எ)

## லங்கா சிமெந்து

# துறைமுக ஊழியர்களுக்கு மீண்டும் சம்பளம் நிறுத்தம்

காங்கேசன்துறை லங்கா சிமெந்து லிமிட்டெட் துறைமுக ஊழியர்களின் சம்பளம் மீண்டும் நிறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக லங்கா சிமெந்து துறைமுகத் தொழிலாளர் சங்கத் தலைவருக்கு உதவிப் பொது முகாமையாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களின் சம்பளம் கடந்த மார்ச் மாதத்திலிருந்து நிறுத்தப்பட்டிருந்தது. பின்பு இப்பிரச்சினை தொழில் திணைக்களத்தினால் ஆராயப்பட்டு செப்டெம்பர் முதல் மீண்டும் சம்பளம் வழங்குமாறு உத்தரவிடப்பட்டது.

இதன் பிரகாரம் செப்டெம்பர் மாதச் சம்பளம் மட்டும் வழங்கப்பட்டது.

தற்போது மேற்கொண்டும் சம்பளம் வழங்க முடியாது என்று கொழும்பில் உள்ள தலைமை அலுவலகம் உதவிப் பொது முகாமையாளருக்கு அறிவித்துள்ளது. (இ)

# அடாவடித்தனங்களை மக்கள் எப்படி மறப்பர்?

## பி. பி. சி. செய்தியாளர் விமர்சனம்

லண்டன், டிச. 19

"கடந்த காலங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் அரச படையினரின் அடாவடித்தனங்களுக்கு ஆளானதை சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது. ஆனால் இலங்கை அரசோ நாலுக்குக் குறைவான வழக்குகளை மட்டுமே படையினருக்கு எதிராக இது வரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறது. அத்துடன் 1991 ஜனவரிக்கு முன் இடம் பெற்ற படையினரின் அத்து மீறல்கள் குறித்து இலங்கை அரசு எதனையுமே தெரிவிக்கவில்லை. படையினரின் வன்செயல்களுக்கு உள்ளான ஆயிரக்கணக்கான பொது மக்கள் இவற்றைச் சுலபமாக மறந்து விடுவார்களா?"

— சர்வதேச மன்னிப்புச் சபை மனித உரிமைகள் தொடர்பாக வழங்கி உள்ள பல சிபாரிசுகளை நடைமுறைப்படுத்தப் போவதாக நேற்று அரசு அறிவித்தது குறித்த தனது விமர்சனத்தில் பி. பி. சி. கொழும்புச் செய்தியாளர் கிறிஸ்தோபர் மொறிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவது குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை குரல் கொடுக்கும் போதெல்லாம் இலங்கை அரசு அதனை மறுத்து வந்தது. ஆனால் இத் தடவை அறிக்கை வெளிவந்ததும் இலங்கை அரசு தனது குரலை மாற்றிக் கொண்டுள்ளது.

கடந்த ஏழு வருட காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களை ஒப்புக் கொள்ளும்படி மன்னிப்புச் சபை கோரி இருந்தது. அப்படிச் செய்தால் பொதுமக்கள் அச்சம் நீங்கி அரசு மீது நம்பிக்கை வைக்க வழி பிறக்கும் என்று அது காரணம் காட்டி இருந்தது.

ஆனால் இலங்கை அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் வடக்கே புலிகளும், தெற்கே ஜே. வி. பியினரும் மனித உரிமைகளை மீறியதாகக் கூறிவிட்டு, அரச படையினரில் சிலர் மீது விசாரணை நடப்பதாகவும், அவர்கள் குற்றவாளிகளாகக் காணப்படின் தண்டிக்கப்படுவார்கள் என்றும் மட்டும் கூறி இந்த விவகாரத்தை இத்துடன் நிறுத்தி விட்டது;

— இப்படி பி. பி. சி. செய்தியாளர் மேலும் தெரிவித்தார். (இ-எ)

## நடவடிக்கை தொடருமாம்

சென்னை, டிச. 19

தமிழ் நாட்டில் புலி எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தாம் கைவிடப்போவதில்லை என்று தமிழ்நாடு முதல்வர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்;

சென்னையில் பொலிஸ் அதிபர்கள், மாவட்டக் கலெக்டர்கள் கலந்துகொண்ட மாநாடு ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-த)

# ஜீ.சீ.ஈ. (சா.த) பரீட்சை நேற்றுடன் முடிவுற்றது

## பணிப்பாளர் நன்றி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிச. 19

கடந்த 9ஆம் திகதி ஆரம்பமான ஜி. சீ. ஈ. சாதாரண தரப்பரீட்சை நேற்று முடிவடைந்தது.

யாழ். மாவட்டத்திலுள்ள பல்வேறு இணைப்பு நிலையங்களில் இருந்தும் விடைத்தாள்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரதேச இணைப்பு நிலையத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

விடைத்தாள்களைக் கொழும்புக்கு கப்பல் மூலம் அனுப்பி வைக்க முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

பரீட்சை அமைதியாக நடைபெற ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் வடபிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் நன்றி தெரிவித்துள்ளார். (ஓ-5)

## ஓவியக் காட்சி

யாழ்ப்பாணம், டிச. 19

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் ஆதரவில் கலைவட்டத்தினர் ஏற்பாடு செய்துள்ள ஓவியக் கண்காட்சி இன்று முதல் 21ஆம் திகதிவரை மூன்று நாட்களுக்கு பல்கலைக்கழக அரும்பொருள் காட்சியகத்தில் நடைபெறவுள்ளது.

தினமும் காலை ஒன்பது மணிமுதல் மாலை 5 மணி வரை கண்காட்சியைப் பார்வையிடலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிச. 19

"எமது வாலிபர்களின் நான் விரும்பும் அழகு — இறைவனின் நிழல்" என்னும் தலைப்பிலான கருத்தரங்கு, இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக் கழக புவியியல் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது; (ஓ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்,
(கலை, வர்த்தக வகுப்புகளுக்குத் தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

A/L 93 கலை, வர்த்தகம்
புதிய பிரிவு ஆரம்பம்:
21 - 12 - 1991
(காலை 8-00 மணி)

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:

| | |
|---|---|
| பொருளியல் | — திரு. கலாகரன் |
| வர்த்தகம் | — திரு. தேவா |
| கணக்கியல் | — திரு. வன்னியசிங்கம் |
| அளவையியல் | — திரு. சுப்பிரமணியம் |
| இ. நாகரிகம் / இ. சமயம் | — திரு. காரை சுந்தரம்பிள்ளை |
| தமிழ் | — திரு. குழந்தை |
| புவியியல் | — திரு. குணராசா |
| அரசியல் | — திரு. சிலன் |
| வரலாறு | — திரு. விஜயன் |

முக்கிய குறிப்பு:
i தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் ஒருங்கிணைந்து போதிக்கப்படும்.
ii அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.
iii 92 ஆம் ஆண்டுக்கான DAY CLASSES ஆரம்பமாகிவிட்டன.
(சி-1085)


## மூளாய்
## வதிரன்புலோ சித்திவிநாயகர் தேவஸ்தான பரிபாலன சபை

அன்புடையீர்!

மேற்படி ஆலயத்துடன் தொடர்புடைய அனைவராலும் 2 - 11 - 1991 இல் ஏகோபித்து உருவாக்கப்பட்ட பரிபாலன சபை, தற்பொழுது இக்கோயிலுக்கு வேண்டிய காப்பு பராமரித்தல், அபிவிருத்தி, அசையுள்ள, அசைவற்ற சொத்துக்களை ஒழுங்குபடுத்தல் போன்ற கடமைகளைச் செய்து வருகின்றது.

இக்கோயிலுக்கு முன்னோர்களால் தர்மசாதனம் செய்யப்பட்ட பல அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்கள் மிக நூதனமாய் மறைந்தும், கைமாறியும், மறைந்தும், சொந்தமாக்கப்பட்டும் இருப்பதனால், இது பற்றிய விபரங்களையும், ஆவணங்களையும் சபைக்கு தந்துதவுமாறு வேண்டுகின்றோம்.

இத்துடன் மேற்படி ஆலயத்துக்குரிய ஆதனங்களை பராமரிப்பவர்களும், சபையுடன் 20-1-1992 க்கு முன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

"சித்தி விநாயகர் கருணை மகத்தானது".

- தர்க்கார்,
பரிபாலன நிர்வாக-
சபை சார்பில்.

(4444)


# BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்.

A/L-93 கலை, வர்த்தக வகுப்புக்கள்
எமது தனித்துவமான " SUPER GRADE "
ஆசிரியர் குழுவினால்

| | |
|---|---|
| பொருளியல் ... | உதயன் |
| வர்த் நிதியும் ... | தேவா |
| கணக்கியல் ... | ராஜன் |
| அளவையியல் ... | S.S. மனோகரன் |
| தமிழ், இந்துநாகரிகம் ... | பாலா |
| புவியியல் ... | இக்னேசியஸ் |

ஆரம்பம்: 21-12-1991 சனிக்கிழமை காலை 8 30 a. m.

93 A/L கணித, விஞ்ஞான வகுப்புக்கள்
(எமது வழமையான ஆசிரியர் குழுவினரால்)
ஆரம்பம்: 23 - 12 - 1991
திங்கள் 3-00 p. m.
(விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.)
(இ-1128)



# புதிய உயர் கல்லூரி
(NEW COLLEGE OF HIGH STUDIES)
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

G. C. E O/L
ஆண்டு 10, 9

புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன.

விஞ்ஞானம் — இரா. செல்வவடிவேல்
கணிதம் — கதிர்
தமிழ் — ரவி
வர்த்தகம் — மகேன்
ஆங்கிலம் — கிரிதரன் சிவலிங்கம்
சமூகக்கல்வி — ராஜன்
(சி-1088)



# 'A' LEVEL CENTRE
உயர் தராதர கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி,
I ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்,

93 ஆம் ஆண்டுக்கான விஞ்ஞான வகுப்புகள்
ஆரம்பம்:
21 12 - 1991
சனி 6-15

தாவரவியல் -
திரு. சிவவீரசிங்கம் B. Sc.
விலங்கியல் -
திரு. தம்பிராஜா B. Sc.
பௌதிகவியல் -
திரு. சௌந்தி B. Sc.
இரசாயனவியல் -
திரு. நாகரட்ணம் B. Sc
தூய/பிரயோக கணிதம் -
திரு. கணேசன் B. Sc.
(இ-1100)



# Personal New Science Centre
எழிலகம் முன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

93 A/L புதிய பிரிவு
ஆரம்பம்:
21 — 12 — 1991
8 30 a m

PHY:- சௌந்தி B. Sc. (Hons)
CHE:- செல்வா B Sc. (Hons)
ZOO:- ஈஸ்வரதாசன் B Sc. (Cey)
BOT:- பாலசுப்பிரமணியம்
PURE / APP. குணசிங்கம்- B. Sc. (Hons)

93 A/L
பிரிவு 1க்குரிய வகுப்புகள்
21 - 12 - 1991
முதல் வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறும்.
(இ-1083)


## ஏழாலை வாசி வரணியில் பலி

தென்மராட்சி, டிச 19

வரணி நாவற்காட்டுப் பகுதி சாட்டியில் காணப்பட்ட தீர்க் கூறி, ஒருவரின் சடலத்தை அப்பகுதி மக்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் கடந்த ஞாயிறன்று ஒப்படைத்தனர்.

இறந்தவர் ஏழாலை மேற்கைச் சேர்ந்த ப. கைலாசபதி இராதன் (வயது 59) எனப் பின்னர் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டனர்.

கடந்த ஞாயிறு காலை வீறுகு வெட்ட வரணிக்கு வந்ததாகவும், இவருக்கு இருதய நோய் இருந்ததாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. (ஓ-117)

## மது அருந்தியவர் பலி

தென்மராட்சி, டிச 19

காய்ச்சலைத் தாங்க முடியாத குடும்பஸ்தர் ஒருவர் அளவுக்கு அதிகமாக மது அருந்தி அநியாயமாக பலியானார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த செவ்வாய் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் மட்டுவில் வடக்கைச் சேர்ந்த எழுபிள்ளைகளின் தந்தையான ஆ. பரமசாமி (வயது 52) என்பவரே மரணமானார்.

அளவுக்கதிகமான மது அருந்தியதால் மரணம் சம்பவித்ததாக சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதிகாரி நா. தர்மேந்திரா தீர்ப்பளித்தார். (ஓ-117)

## மட்டக்களப்பில் 39 ஆயிரம் பேர் மழையினால் பாதிப்பு

கொழும்பு, டிச. 19

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஆறு தினங்களாக பெய்து வந்த பெரு மழை காரணமாக ஏற்பட்ட பெரு வெள்ளத்தினால் சுமார் 35 ஆயிரம் பேர் அகதிகளாகியுள்ளனர். சுமார் 4 ஆயிரம் பேர் வீடிழந்தனர்.

இவர்கள் அனைவரும் பாடசாலைகள் மற்றும் கோவில்களில் தஞ்சம் புகுந்துள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது. (த-எ)

## தருமப் பண கொடுப்பனவு

யாழ்ப்பாணம், டிச. 19

வலி. தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் (தருமப் பணம்) பெறுபவர்களுக்கான அக்டோபர் மாதத்துக்குரிய கொடுப்பனவுகள் தற்போது வழங்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி உதவிப் பணம் பெறுபவர்கள் உடனடியாகத் தமது கிராம அலுவலருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஓ-5)


# C. C. A.
யாழ்ப்பாணம்
(வெலிங்டன் சந்திக்கருகாமை)

புவியியல்
வேலாயுதபிள்ளை
A/L 92, 93
புதிய பிரிவுகள்
ஆரம்பம்:
21-12-1991
(சி/1205)


# முகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்கே நிவாரணம்

## நாடாளுமன்றில் அமைச்சர் தகவல்

கொழும்பு, டிச. 19

முகாம்களுக்கு வெளியில் வாழும் அகதிகளுக்கு இனி நிவாரணம் வழங்கப்படமாட்டாது.

புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் பி. தயாரத்தின இத்தகவலை கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது:

அகதி முகாம்களுக்கு வெளியே வாழும் அகதிகளுக்கு இனிமேல் எந்த நிவாரணம் கொண்டும் உலர் உணவுப் பொருள்கள் இலவசமாக விநியோகிக்கப்படமாட்டா.

இதற்காக இதுவரை அரசு பெருந்தொகைப் பணத்தை செலவிட்டு வந்திருக்கிறது. இவ்வருடம் நவம்பர் மாதம் வரை 820 கோடி ரூபா அகதிகளுக்கு நிவாரணம் வழங்க செலவிடப்பட்டுள்ளது — என்றார் அவர். (ஓ-த-எ)

## ஊவா பிரதேசத்திலும் கட்டுப்பாடு

கொழும்பு, டிச. 19

மணவிடோ அல்லது பிணவிடோ அல்ல வேற்று ஊரவர்கள் வந்தால் அது பற்றி பொலிஸாருக்கு அறிவிக்க வேண்டும் என்று ஊவா பிரதேச மக்களை பொலிஸார் கோரியுள்ளனர்.

சமூக மற்றும் வாழ்வு நிகழ்ச்சிகளை பயன்படுத்தி தீவிரவாதிகள் ஊடுருவுவதையும், தங்கள் காரியங்களை சூத்திரமாக நிறைவேற்றுவதையும் தடுக்கும் முகமாகவே இவ்விதம் அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் கூறின. (த-எ)

# மரண அறிவித்தல்கள்

## செல்வி து. கிரித்திகா

நவின் திகவப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சுன்னாகம் பருத்திக்கலட்டியை வதிப்பிடமாகக் கொண்டவருமான செல்வி து. கிரித்திகா காலமானார். அன்னார் துரைரெத்தினம் விஜயலெட்சுமி (அம்பாள் சாறி நிலையம், பண்டாரவளை - சுன்னாகம்) தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், துஜீபா (உடுவில் மகளிர் கல்லூரி) பதிரன், வேணுஜா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 18-12-91 இல் சுன்னாகத்தில் நடைபெற்றன.

தகவல்.
பருத்திக்கலட்டி, சுன்னாகம். அ. ஓங்காரநாதன்

(19080)

## கந்தையா கணேசதாசன்

அராலி வடக்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த க. கணேசதாசன் (இளைப்பாறிய சுகாதாரப் பரிசோதக மேற்பார்வையாளர்) 15-12-91 இல் இவபதமெய்தினார். அன்னார் காலஞ்சென்ற கந்தையா (தலைமைக்கொல்லை ஓவசியர்) - சின்னம்மா ஆகியோரின் அருமைப் புதல்வரும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - தங்கமணி ஆகியோரின் அருமை மருமகனும், காலஞ்சென்ற சுகிர்தலக்ஷ்மியின் பாசமிகு கணவரும், சிறீஸ்கந்தா (சிவசர்வர் நிலைக்களம், கண்டி), அம்பிகா (கனடா), ராசபூஷணம் (கொழும்பு), ஸ்ரீ ஷங்கர் (தேசிய பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை, அவிசாவளை) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருஞானசம்பந்தர் (கனடா), சந்திரகுமாரி (கண்டி), பஞ்சலிங்கம் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுகிர்தா சிவந்தியின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 16-12-91 அன்று அராலியில் நடைபெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
6/2, சந்தனமாதா கோவில் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். வே. குகதாசன்

(18956)

## திருமதி செல்லப்பா பொன்னம்மா

சரவணை மேற்கை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி செல்லப்பா பொன்னம்மா காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லப்பாவின் மனைவியும், நாகராசா, சரஸ்வதி, தம்பிராசா, ரஞ்சனாவதி (இராசாத்தி - பிரான்ஸ்) ஆகியோரின் தாயாரும், கந்தையா, புவனேஸ்வரி, சரஸ்வதி, தேவராசா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இல. 15, அரசடி லேன், நெடுங்குளம் றோட், அரியாலையில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி மயானத்துக்கு 19-12-91 பிற்பகல் 2-00 மணியளவில் எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
இல. 15 அரசடி லேன், நெடுங்குளம் றோட், அரியாலை. சி. துரைபரநாதன்

(18957)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் ... தில் 19 - 12 - 1991 ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org